# பரிசளிப்பு விழா அதிபர் அறிக்கை 2018



காலம்: 2018.03.31

நேரம்: காலை 9.01 மணி

இடம்: பாடசாலை பிரதான மண்டபம்

## யா/தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளி
## தெல்லிப்பளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசளிப்பு விழா

# அதிபர் அறிக்கை – 2018

உலக மணித்தீவாம் ஈழத்திருநாட்டின் புகழ்பூத்த கிராமங்களில் ஒன்றாகவும், பல அறிஞர்களையும், அறிவாளிகளையும் தோற்றுவித்த தெல்லிப்பளைக் கிராமத்தின் ஆரம்பக் கல்விக் கண்ணாகவும் விளங்கும் யா/தந்தை செல்வா தொடக்கநிலைப் பள்ளியின் 2018 ஆம் ஆண்டிற்கான பரிசளிப்பு விழா அறிக்கையினை எல்லாம் வல்ல இறையருளின் பாதம் பணிந்து சமர்ப்பிப்பதில் பேருவகை அடைகின்றேன்.

இன்றைய விழாவிற்கு எமது அழைப்பை ஏற்று பிரதம விருந்தினராக வருகை தந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் மதிப்பார்ந்த திருமிகு ந.காண்டீபன் அவர்களே, சிறப்பு விருந்தினராகக் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் திரு.எஸ்.சி.சி.இளங்கோவன் அவர்களே, திருமிகு ப.சசிகுமார் அவர்களே, ஆசியுரை வழங்க வந்திருக்கும் சிவஸ்ரீ ந.குகனேசக் குருக்கள் அவர்களே, அயற்பாடசாலை அதிபர் பெருமக்களே, ஆசிரியப் பெருந்தகைகளே, பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களே, பற்றுறுதிமிக்க பழைய மாணவர்களே, அன்பு நிறைந்த பெற்றோர்களே, எமது பாடசாலை ஆசிரியர்களே, ஊக்கம் மிக்க மாணவ மணிகளே உங்கள் அனைவருக்கும் என் இனிய வணக்கம் கூறி வருக என வரவேற்பதில் பெருமகிழ்வடைகின்றேன்.

ஆசியுரை வழங்க வருகை தந்திருக்கும் வணக்கத்திற்குரிய சிவஸ்ரீ நா.குகனேசக் குருக்கள் அவர்கள் குறைந்த வயதிலேயே குருப் பட்டம் பெற்று பல ஆலயங்களில் மகோற்சவங்கள், கும்பாபிஷேகங்களை தலைமை தாங்கிய பெருமைக்குரியவர். யாழ்ப்பாணத்தில் மட்டு மல்லாது இலங்கையின் பல்வேறு பாகங்களிலும் குருப்பணி ஆற்றியதுடன் ஐரோப்பிய நாடுகளிலும் குருப்பணி ஆற்றியுள்ளார். இவர் சென்ற ஆண்டு ஆசியுரை வழங்கிய வணக்கத்துக்குரிய முத்தமிழ்க்குருமணி சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக் குருக்கள் அவர்களின் மருமகன் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இன்றைய நாளில் ஆசி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது விழாவிற்கு பிரதம விருந்தினராக வருகை தந்திருக்கும் மதிப்பார்ந்த வலிகாமம் கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு.நடராசா காண்டீபன் அவர்களை வரவேற்பதில் மிக்க மகிழ்வடைகின்றேன். பரந்த அறிவும் ஆற்றலும் கல்விப்புலத்தில் மிக்க அனுபவமும் கொண்ட இவர் விஞ்ஞானமாணி பட்டப்பின் கல்வி டிப்ளோமா, முதுகலைமாணிப் பட்டங்களைப் பெற்றவர். வலிகாமம் கல்வி வலயத்தின் கல்வி அபிவிருத்திக்குப் பொறுப்பாக இருந்து தனது கடமைகளை திறமையாகச் செய்பவர். அமைதியான சுபாவம் கொண்ட இவர் எந்தக் கருமத்தையும் நிதானத்துடன் செயற்படுத்தும் திறமை கொண்டவர். இத்தகைய சிறப்புமிக்க ஒருவரை இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக வரவேற்படைவதில் மகிழ்வடைகின்றேன்.

இன்றைய விழாவிற்கு சிறப்பு விருந்தினராக எமது அழைப்பை மனமுவந்து ஏற்றுக்கொண்டு இங்கு வருகை தந்திருக்கும் உயர்திரு. எஸ்.சி.சி.இளங்கோவன் அவர்களைப் பற்றிச் சில வார்த்தைகள்.

திரு.எஸ்.சி.சி.இளங்கோவன் அவர்கள் இளமைத் துடிப்பும், நேர்மையும், கண்ணியமும் மிக்க ஒரு கனவான் என்பதை அவருடன் பழகிய அனைவரும் நன்கு அறிவார்கள். ஈழத் தமிழ் மக்களின் ஏகோபித்த மதிப்புக்கும், அளவற்ற அன்புக்கும் பாத்திரமாகிய மூதறிஞர், ஈழத்து காந்தி எனப் போற்றப்படும் தந்தை செல்வா அவர்களின் பேரன். சென்ற ஆண்டு பரிசளிப்பு விழாவிற்கு பிரதம விருந்தினராக கலந்து கொண்டு எம்மைப் பெருமைப்படுத்திய உயர்திரு.எஸ்.சி.சந்திரகாசன் ஐயா அவர்களின் ஏகபுத்திரர். திரு.இளங்கோவன் அவர்களின் தாயார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஆரம்பகால செயலாளரும், தந்தை செல்வா அவர்களின் வலக்கரமாகி தம்மைத் தமிழினத்திற்காக அர்ப்பணித்தவருமாகிய இரும்பு மனிதர் டாக்டர் இ.எம்.வி.நாகநாதன் அவர்களின் மகள், சட்டநிபுணர் நிர்மலா சந்திரகாசன் அம்மையார்.

திரு.இளங்கோவன் அவர்களும் ஒரு சட்ட அறிஞரே. நீதிமன்றங்களில் நிற்பதைக் காட்டிலும் தமிழ் மக்கள் மேம்பாட்டுக்காக உழைப்பதையே தம் இலட்சியமாகக் கொண்டவர். ஆடம்பரமின்றி அநேக காரியங்களைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம் நுண்ணறிவினால் சாதித்து வருவதை அறிந்து நாம் மகிழ்ச்சி அடைகின்றோம். அத்துடன் அண்மைக் காலமாக S.J.V செல்வநாயகம் நினைவு அறக்கட்டளை பாடசாலையுடன் நெருக்கமான உறவுடன் பல செயற்பாடுகளை ஆற்றி வருவதுடன் வசதி குறைந்த மாணவர்களுக்குக் கற்றலுக்கான ஊக்குவிப்பையும் வழங்கி வருகிறார்கள். இன்றைய விழாவில் சிறப்பு விருந்தினராக வருகை தந்து சிறப்பித்துக் கொண்டிருப்பது இப்பாடசாலைச் சமூகத்திற்கு அளவற்ற பெருமையைத் தருகின்றது.

எமது சிறப்பு விருந்தினராக வருகை தநது எம்மைக் கௌரவிக்கும் திருமிகு பத்மநாதன் சசிகுமார் அவர்கள் ஏழாலை கிழக்கைச் சேர்ந்தவர். தனது ஆரம்பக் கல்வியை யா/ஏழாலை சைவ மகாஜனாவிலும், இடைநிலைக் கல்வியை யா/ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க பாடசாலையிலும், யாழ்/மத்திய கல்லூரியிலும் கற்றார்.

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் 2003 ஆம் ஆண்டு ஆரம்பக்கல்வி டிப்ளோமா சித்தியடைந்து கிளி/கிராஞ்சி அ.த.க பாடசாலையில் முதல் நியமனம் பெற்று கிளி/வலைப்பாடு றோ.க பாடசாலையிலும், யா/தந்தை செல்வா தொடக்க நிலைப் பள்ளியிலும் தமது சேவையினைத் தொடர்ந்து, கல்வி நிர்வாகசேவை பரீட்சையிலும் சித்திபெற்று தற்போது யாழ்ப்பாண வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளராகப் பதவியேற்றுள்ளார். இத்துடன் B.A, B.Ed, PGDE, MEd முதலான பட்டங்களையும் தனதாக்கியுள்ளார். ஆசிரியர் வாண்மை விருத்தி நிறுவனத்தின் வளவாளராகவும் சேவையாற்றுகிறார்.

எமது பாடசாலையில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 2014 ஆம் ஆண்டு மூன்று மாணவர்களையும், 2017 ஆம் ஆண்டு நான்கு மாணவர்களையும் சித்தியடைய வைத்த பெருமை இவருக்குரியதே. இவர் எழுதிய தரஉள்ளீடு செயற்பாடு தொடர்பான கட்டுரை கல்வி அமைச்சின் கல்விக் குறிக்கோள் தமிழ்ப் புத்தகத்தில் வெளிவந்திருப்பது பெருமைக்கும் பாராட்டுக்குமுரியதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் மென்மேலும் வளர்ச்சியுற்று வாழ்விலும் சிறப்புற வாழ்த்துகிறோம்.

அயற்பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், எமது பாடசாலையின் முன்னாள் அதிபர்கள், ஆசிரியப் பெருந் தகைகள், பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், SJV செல்வநாயகம் நினைவு அறக்கட்டளையினர், பெற்றோர்கள், எமது பாடசாலை ஆசிரியர்கள், மாணவச் செல்வங்கள் அனைவரையும் வருக வருக என வரவேற்கின்றேன்.

## பாடசாலையின் வரலாறு

01.01.1979 ஆம் ஆண்டு யூனியன் கல்லூரியில் இருந்து ஆரம்பப் பிரிவு மாணவர்கள் மாத்திரம் இப்பாடசாலையில் இணைந்து திரு.க.சிவநேசன் அதிபராகப் பொறுப்பேற்று இப்பாடசாலை சிறப்புடன் இயங்கத் தொடங்கியது. 13.02.1979 இல் எதிர்க்கட்சித் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமாகிய திரு.அ.அமிர்தலிங்கத்தின் தலைமையில் நடைபெற்ற பெற்றோர், ஆசிரியச் சங்கப் பொதுக் கூட்டத்தில் தந்தை செல்வநாயகத்தின் வளவில் அமைந்திருக்கும் இப் பாடசாலைக்கு "யா/தந்தை செல்வா தொடக்கநிலைப் பள்ளி" எனப் பெயர் சூட்டப்பட வேண்டும் என ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டதற்கமைய இப் பாடசாலை புதிய மெருகுடனும், வீச்சுடனும், கல்வி, இணைபாட விதானச் செயற்பாடுகள் ஆகியவற்றிலும் பெருவளர்ச்சி உடையதாகி ஆரம்பப் பாடசாலையாக வளர்ச்சி பெற்று வருகின்றது.

ஆண்டுதோறும் நடைபெறும் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையிலும் பல மாணவர்களைச் சித்தியடையச் செய்வதுடன் பல்வேறு போட்டிகளிலும் வெற்றிவாகை சூடி தனது தனித்தன்மையை நிலைநாட்டி வருகிறது இப்பாடசாலை. 15.06.1990 ஆம் ஆண்டு வலிகாமம் பிரதேசத்தில் ஏற்பட்ட இடப்பெயர்வினால் இப்பாடசாலையும் பல்வேறு இடங்களை நோக்கி இடம்பெயர்ந்தது. தெல்லிப்பளை சைவப் பிரகாச வித்தியாசாலை, மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம், மல்லாகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசாலாட்சி வித்தியாலயம் எனப் பல பாடசாலைகளில் இயங்கி 16.09.2002 இல் பன்னிரண்டு வருடங்களின் பின்னர் மீண்டும் சொந்த இடத்தில் இயங்கத் தொடங்கியது. இவ்வேளையில் திரு.மு.சொர்ணலிங்கம் அவர்கள் அதிபராகக் கடமையாற்றினார். 01.10.2007 இல் அதிபராக திரு.க.காராளசிங்கம் அவர்கள் பொறுப்பேற்றார். 31.12.2015 இல் இட மாற்றம் பெற்றுச் சென்றுள்ளார். அன்றிலிருந்து 24.04.2016 வரை உப அதிபர் திருமதி ச.ஸ்கந்தகுமார் அவர்கள் அதிபராகக் கடமையாற்றினார். 2016.04.25 தொடக்கம் திரு.த.வாமதேவன் அவர்கள் கடமையேற்று தற்போது பாடசாலையை நடாத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

எமது பாடசாலை 2016 ஆம் ஆண்டு தொடக்கம் அண்மைய பாடசாலை செயற்பாட்டிற்குள் பல்வேறு வசதிகளையும் ஏற்படுத்தி, கிராமப்புற பாடசாலைகளை விட்டு நகர்ப்புற பாடசாலைகளுக்கு மாணவர்கள் செல்லாத நிலையை உருவாக்க வேண்டும் என்ற எண்ணப்பாங்கில் ஏற்படுத்தப்பட்டதே இப்பாடசாலைத் திட்டமாகும். இத்திட்டம் கிடைக்கப் பெறும் வேளையில் இப்பாடசாலை மேலும் வளர்ச்சிப் பாதையில் முன்னோக்கிச் செல்லும் என நம்புகிறோம்.

## பாடசாலை ஆரம்பித்த காலம் முதல் இற்றைவரை சேவையாற்றிய அதிபர்கள்

| | | |
|---|---|---|
| 1. | திரு.க.சிவநேசன் | 1979 – 1983 |
| 2. | திரு.சி.சிவலிங்கம் | 1983 – 1986 |
| 3. | திரு.சி.செல்வநாயகம் | 1986 – 1997 |
| 4. | திரு.மு.சொர்ணலிங்கம் | 1997 – 2007 |
| 5. | திரு.க.காராளசிங்கம் | 2007 – 2015 |
| 6. | திருமதி ச.ஸ்கந்தகுமார் | 01.01.2016 – 24.04.2016 (பதில் கடமை) |
| 7. | திரு.த.வாமதேவன் | 25.04.2016 – இன்றுவரை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை ஆசிரிய ஆளணியினர்

அதிபர் உட்பட நிரந்தர ஆசிரியர் – 10

## மாணவர் எண்ணிக்கை

தரம் 1 – 58

தரம் 2 – 67

தரம் 3 – 44

தரம் 4 – 45

தரம் 5 – 50

## புதிதாக இணைந்து கொண்டோர்

1. திருமதி சத்தியபாமா சதீசன் – 2017
2. திருமத சிவனேஸ்வரி பரமசிவம் – 2018

## பாடசாலை முகாமைத்துவ அணியினர் (SMT/SMC 2017)

1. திரு.தம்பிஜயா வாமதேவன் (அதிபர்) தலைவர்
2. திருமதி மைதிலி சிவநாதன் (சிரேஷ்ட ஆசிரியர்) உறுப்பினர்
3. திரு.இராசரத்தினம் ஜெயதாஸ் (ஆசிரியர்) உறுப்பினர்
4. திருமதி சுமித்திரா சிறிஸ்கந்தராஜா (ஆசிரியர்) உறுப்பினர்
5. திருமதி தாரணி சுரேஸ் (ஆசிரியர்) உறுப்பினர்
6. திருமதி அனிற்றா ராஜி அன்ரன் (ஆசிரியர்) உறுப்பினர்
7. திருமதி பாரதி மகேந்திரன் (ஆசிரியர்) உறுப்பினர்
8. திருமதி உமாராணி பேரானந்தம் (ஆசிரியர்) உறுப்பினர்
9. திருமதி வக்சலா நிதாகரன் (ஆசிரியர்) உறுப்பினர்
10. திருமதி சத்தியபாமா சதீசன் (ஆசிரியர்) உறுப்பினர்
11. திருமதி சிவனேஸ்வரி பரமசிவம் (ஆசிரியர்) உறுப்பினர்

## SJV செல்வநாயகம் நினைவு அறக்கட்டளை

இப்பாடசாலையில் கற்றல் கற்பித்தல் சார் தேவைகளுக்கும் பௌதிகவளம் சார் தேவைகளுக்கும் ஆண்டுதோறும் 222000/= ரூபாவை அன்பளிப்புச் செய்து வருகின்றனர். முன்பள்ளி ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுப்பனவு, ஆங்கில பாட ஆசிரியருக்கான கொடுப்பனவு, சுகாதார செயற்பாடு, 20 மாணவருக்கு ரூபா 500/= கொடுப்பனவு போன்ற செலவினங்களுக்காக இவ்வன்பளிப்பு பகிரப்படுகிறது. எமது மாணவர் களின் கல்வியில் கண்ணும் கருத்தும் கொண்டு உழைக்கும் இந் நிதியத்தின் பணிகள் சிறப்புப்பெற வாழ்த்துகிறோம். அவர்களுக்கு எமது பாடசாலைச் சமூகம் சார்ந்த மனம் நிறைந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இப்பாடசாலையில் வருடாவருடம் பரிசுத்தினம், தமிழ்த்தினம், சிறுவர்தினம், கால்கோள்விழா, இல்ல மெய்வல்லுநர் போட்டி, தரம் 5 ஒன்றுகூடல், இணைபாடவிதானச் செயற்பாடுகள் சிறந்த முறையில் செயற்பட்டு வருகின்றன. பழைய மாணவர்களின் பேருதவியினாலும், பெற்றோர்கள், நலன்விரும்பிகளின் ஒத்துழைப்பினாலும், கல்வித் திணைக்களத்தின் ஒத்துழைப்பினாலும் இவ்விழாக்கள் சிறந்த முறையில் நடைபெற்று பாடசாலையின் பணிகளையும் சிறப்புறச் செயற் படக்கூடியதாக இருக்கின்றது. மேலும் பழைய மாணவர்கள் தாங்கள் ஆரம்பக் கல்வியைக் கற்ற கல்வித்தாயை மறந்திடாது வந்து தேவைகள் அறிந்து பல்வேறு அன்பளிப்புக்களை வழங்கி வருவதுடன் விளையாட்டுப் போட்டி சிறப்புற நடைபெற உதவியும் புரிகின்றனர். இத்தகைய கைங்கரியங்களைச் செய்துவரும் இப்பள்ளியின் பழைய மாணவர்களது செயற்பாட்டினால் இப்பள்ளி பெருமை அடைகிறது. நன்றிகள் பல.

## பெற்றோர்கள்

இப் பாடசாலையின் சகல விடயங்களிலும் செயற்திறன் மிக்க பங்களிப்பினை அர்ப்பணிப்புடன் செய்து சேவையாற்றி தமது பிள்ளை களின் கல்வி முன்னேற்றத்திற்காக அயராது பணிபுரிகின்றனர். அந்த வகையில் பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் திரு.கனகரத்தினம் வசீகரனின் சேவையானது பாடசாலைச் சமூகத்திற்கு மிகமிகப் பேருதவியாக விளங்குகின்றது. தன்னலமற்ற அவரது சேவை பாராட்டுக்குரியதுடன் இத்தகையோரைப் பாடசாலைச் சமூகம் என்றென்றும் நன்றியுடன் நினைவு கூருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்விக் கண்காட்சி

உதயதாரகை சனசமூக நிலையத்தினர் யா/குரும்பசிட்டி பொன் பரமானந்தா வித்தியாலயத்தில் நடாத்திய சுற்றாடல் பாடம் சார்ந்த கல்விக் கண்காட்சியில் எமது பாடசாலை பங்குபற்றி சிறப்புச் சான்றிதழ் பெற்றதுடன் மாணவர்களும் ஊக்குவிப்பும் பரிசில்களும் பெற்றனர்.

## பாடசாலை அபிவிருத்திக் குழுவினர் (SDC)

1. திரு.தம்பிஜயா வாமதேவன் — தலைவர் (அதிபர்)
2. திரு.கனகரத்தினம் வசீகரன் — செயலாளர் (பெற்றோர்)
3. திருமதி தாரணி சுரேஸ் — பொருளாளர் (ஆசிரியர்)
4. திருமதி மைதிலி சிவநாதன் — உறுப்பினர் (ஆசிரியர்)
5. திருமதி அமிர்தரஞ்சினி திருநாவுக்கரசு — உறுப்பினர் (பெற்றோர்)
6. திருமதி சுவேந்தினி அல்டின் ஆம்ஸ்ரோங் — உறுப்பினர் (பெற்றோர்)
7. திருமதி வீரக்குட்டி கோபாலகிருஷ்ணன் — உறுப்பினர் (பெற்றோர்)
8. திருமதி தீபா சச்சிதானந்தம் — உறுப்பினர் (பெற்றோர்)
9. திருமதி லத்திக்கா நந்தகுமார் — உறுப்பினர் (பெற்றோர்)
10. திருமதி கவிதா சிவனேசன் — உறுப்பினர் (பெற்றோர்)

## பாடசாலை தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழு

1. திருமதி மைதிலி சிவநாதன்
2. திரு.இராசரத்தினம் ஜெயதாஸ்
3. திருமதி சுமித்திரா சிறிஸ்கந்தராஜா
4. திருமதி வக்சலா நிதாகரன்

## பாடசாலை ஆசிரியர் அபிவிருத்திக்குழு (SBD)

1. திரு.தம்பிஜயா வாமதேவன் — தலைவர் (அதிபர்)
2. திருமதி மைதிலி சிவநாதன் — உறுப்பினர் (ஆசிரியர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. திருமதி சுமித்திரா சிறிஸ்கந்தராஜா — உறுபபினர் (ஆசிரியர்)
4. திருமதி தாரணி சுரேஸ் — உறுப்பினர் (ஆசிரியர்)
5. திருமதி உமாராணி பேரானந்தம் — உறுப்பினர் (ஆசிரியர்)
6. திரு.இராசரத்தினம் ஜெயதாஸ் — உறுப்பினர் (ஆசிரியர்)

## கட்டாயக் கல்விக் குழு

1. திரு.தம்பிஐயா வாமதேவன் — தலைவர் (அதிபர்)
2. திருமதி மைதிலி சிவநாதன் — உறுப்பினர் (ஆசிரியர்)
3. திருமதி சுமித்திரா சிறிஸ்கந்தராஜா — உறுப்பினர் (ஆசிரியர்)
4. திருமதி அனிற்றா ராஜி அன்ரன் — உறுப்பினர் (ஆசிரியர்)

கிராம அலுவலர் – திரு.கார்த்திகேசு துவாரகன்
வாழ்வின் எழுச்சி அலுவலர் – திருமதி நிறோஜினி ஸ்ரீக்குமார்
நலன் விரும்பி – திரு.சி.விக்கினராஜா (ஓய்வுநிலை வங்கி முகாமையாளர்)
மாணவர் தலைவன் – வை.கோகுலன்
மாணவத் தலைவி – கோ.கர்சிகா

## பாடசாலை அபிவிருத்தி திட்டக்குழு (SDPC)

1. திரு.தம்பிஐயா வாமதேவன் — தலைவர் (அதிபர்)
2. திருமதி மைதிலி சிவநாதன் — உபதலைவர் (ஆசிரியர்)
3. திரு.இராசரத்தினம் ஜெயதாஸ் — உறுப்பினர் (ஆசிரியர்)
4. திருமதி பாரதி மகேந்திரன் — உறுப்பினர் (ஆசிரியர்)
5. திருமதி தாரணி சுரேஸ் — உறுப்பினர் (ஆசிரியர்)
6. திருமதி வக்சலா நிதாகரன் — உறுப்பினர் (ஆசிரியர்)
7. திருமதி சத்தியபாமா சதீசன் — உறுப்பினர் (ஆசிரியர்)
8. திருமதி சிவனேஸ்வரி பரமசிவம் — உறுப்பினர் (ஆசிரியர்)

## பாடசாலை பெறுகைக்குழு

1. திரு.தம்பிஐயா வாமதேவன் — தலைவர் (அதிபர்)
2. திரு.இராசரத்தினம் ஜெயதாஸ் — உறுப்பினர் (ஆசிரியர்)
3. திருமதி தாரணி சுரேஸ் — உறுப்பினர் (ஆசிரியர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. திருமதி அனிற்றா ராஜி அன்ரன் உறுப்பினர் (ஆசிரியர்)
5. திருமதி உமாராணி பேரானந்தம் உறுப்பினர் (ஆசிரியர்)
6. திருமதி சுமித்திரா சிறிஸ்கந்தராஜா உறுப்பினர் (ஆசிரியர்)

## பாடசாலை ஒழுக்காற்றுக்குழு

1. திரு.தம்பிஐயா வாமதேவன் - அதிபர்
2. திருமதி மைதிலி சிவநாதன் - உபஅதிபர்
3. திருமதி சுமித்திரா சிறிஸ்கந்தராஜா
4. திருமதி தாரணி சுரேஸ்
5. திருமதி பாரதி மகேந்திரன்
6. திருமதி அனிற்றா ராஜி அன்ரன்
7. திருமதி உமாராணி பேரானந்தம்
8. திரு.இராசரத்தினம் ஜெயதாஸ்
9. திருமதி வக்சலா நிதாகரன்
10. திருமதி சத்தியபாமா சதீசன்
11. திருமதி சிவனேஸ்வரி பரமசிவம்

## சுற்றாடல் முன்னோடிப் படையணி

பொறுப்பு உத்தியோகத்தர் - திருமதி அனிற்றா ராஜி அன்ரன்
தலைவர் - தீ.கரித்வர்ணன்
உபதலைவர் - ச.ஆகாஷ்
உதவித் தலைவர் - நா.ஜீவதாஸ்

## பழைய மாணவர் சங்கம்

தலைவர் - திரு.த.வாமதேவன் (தலைவர்)
செயலாளர் - திரு.ப.சேயோன்
உபசெயலாளர் - திருமதி சி.சுமித்திரா
பொருளாளர் - திருமதி தாரணி சுரேஸ்
நிர்வாக உறுப்பினர்கள் - Dr.N.C.நிசாந்தினி
திரு.கா.துவாரகன்
திருமதி ஞா.கீதாஞ்சலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.இ.இராதாகிருஸ்ணன்
திரு.V.K.ரவிகரன்
திரு.ந.சிவாகரன்
திருமதி க.சிவநேசன்

## இந்து மாமன்றம்

| | | |
|---|---|---|
| பொறுப்பாசிரியர் | – | திருமதி சுமித்திரா சிறிஸ்கந்தராஜா<br>திருமதி சத்தியபாமா சதீசன் |
| தலைவர் | – | சு.திலக்ஷி |
| செயலாளர் | – | வி.டயானி |
| பொருளாளர் | – | ச.சதுர்ஷிகன் |

இம்மன்றமானது காலைப் பிரார்த்தனை செயற்பாடுகள், பிரதி வெள்ளிக்கிழமைகளில் சிவபுராணம் ஓதுதல், வருடாவருடம் நடை பெறுகின்ற நவராத்திரி விழா என்பவற்றைத் திறம்பட நடாத்தி வருகின்றது.

## மாணவர் மன்றம்

| | | |
|---|---|---|
| பொறுப்பாசிரியர் | – | திருமதி வ.நிதாகரன் |
| தலைவர் | – | க.வர்ணவி |
| செயலாளர் | – | கி.டனுசன் |
| பொருளாளர் | – | சி.கவிநாஸ் |

இம்மன்றம் மாணவர்களது ஆற்றல், தலைமைத்துவப் பண்பு போன்றவற்றை விருத்தி செய்யக்கூடிய வகையில் அமைவதோடு மாணவர்களிடத்து மறைந்திருக்கும் திறமைகளை வெளிக்கொணர வழிவகுக்கிறது.

## விளையாட்டுத்துறை

இத்துறைக்குப் பொறுப்பாக திருமதி சுமித்திரா சிறிஸ்கந்தராஜா அவர்கள் செயற்பட்டு வருகிறார் செயற்பட்டு மகிழ்வோம், கோட்ட மட்ட, வலய மட்டப் போட்டிகளில் மாணவர்களை பங்குபெற வைத்து பாடசாலைக்கு பெருமை சேர வைத்துள்ளமை பாராட்டுக்குரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுகநல மன்றம்

| | | |
|---|---|---|
| பொறுப்பாசிரியர் | – | திருமதி சிவனேஸ்வரி பரமசிவம் |
| தலைவர் | – | ஜெ.அஸ்வின் |
| செயலாளர் | – | ந.தரண்ஜா |
| பொருளாளர் | – | ரா.திரஸ்திகா |

இம்மன்றமானது மாணவர்களின் போசாக்குநிலை, சுகாதார மேம்பாடு, உடல்நலக் குறைபாடு, சூழல் சுத்தம் போன்றவற்றில் கவனஞ் செலுத்தி, பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் ஆலோசனையுடன் செயற்பட்டு வருகின்றது.

## தொண்டர் ஆசிரியர் விபரம்

1. செல்வி.பூலோகராஜா நளாயினி
2. திருமதி தியானா கோகுலன்
3. செல்வி.குயின்சா மகேஸ்வரன்

இவர்கள் மேலதிக எழுத்தறிவூட்டல் வகுப்புக்களுக்குத் துணை புரிகின்றனர்.

## முன்பள்ளி ஆசிரியர் விபரம்

எமது பாடசாலையில் 2011 ஆம் ஆண்டு தந்தை செல்வா முன் பள்ளி ஆரம்பிக்கப் பெற்றுள்ளது. இதன் ஆசிரியர்களாக,

1. செல்வி ரேகா குழந்தைவேல்
2. திருமதி செயாமளா சுகுமார்
3. திருமதி கிரிஜா பிரதீபன்

ஆகியோர் சேவையாற்றுகின்றனர்.

## உதவி நல்கியோர்

திரு. திருமதி தங்கராசா தவமணி (மணி லண்டன்) இவர்கள் இரண்டு மாடிக் கட்டடத்திற்கு மின்சார இணைப்பினைச் செய்து தந்துதவி உள்ளார்கள். இவர்களுக்கு பாடசாலைச் சமூகம் சார்ந்த நன்றிகள் பல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. திருமதி குகதாஸ் பாமினி அவர்கள் முன்னாள் அதிபரான திரு.சி.செல்வநாயகம் ஞாபகார்த்தமாக விளையாட்டுப் போட்டிக்காக 269 மாணவர்களுக்கு கேடயங்களைத் தந்துதவியதுடன் இனி வரும் காலத்திலும் தந்து உதவுவதாக வாக்களித்துள்ளார்கள். அவர்களுக்கு பாடசாலை சமூகம் சார்ந்த நன்றிகள்.

அமரர் திருவாளர் லயன்ஸ் மகாதேவா பூமாதேவியின் ஞாபகார்த்தமாக அவர்களின் மகன், மருமகளான திரு. திருமதி பிரிதிவ்ராஜா பவித்திரா விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற இல்லத்திற்குரிய கேடயத்தை வழங்கியதுடன் ஒவ்வொரு வருடமும் தந்துதவுவதாகவும் வாக்களித்துள்ளார்கள். இவர்களுக்கு பாடசாலைச் சமூகம் சார்ந்த நன்றிகள் பல.

திரு. திருமதி வசீகரன் கலசாயினி பாடசாலையின் தன்னலமற்ற உதவியாளர்கள். பாடசாலை வளர்ச்சிக்கு அபிவிருத்திச் சங்கச் செயலாளராக எம்முடன் கைகோர்த்து ஒவ்வொரு வருடமும் ஆசிரியர் தினத்துக்கு உரிய மதிய உணவினை ஏற்பாடு செய்வதுடன், இம்முறை விளையாட்டுப் போட்டிக்கான முழு பந்தல் செலவினைத் தந்துதவி உள்ளார்கள். இனி வரும் காலத்தில் தொடர்ந்து உதவுவதாகவும் வாக்களித்துள்ளார்கள். இவர்களுக்கு எமது பாடசாலைச் சமூகம் சார்ந்த நன்றிகள் பல.

வசீகரன் கலசாயினி, சிவானந்தராசா நளாயினி ஆகிய இரு பெற்றோர்களும் இணைந்து 180 ரம்ளர்களைப் பாடசாலைக்கு வழங்கி உள்ளார்கள். அவர்களது உதவிக்கு பாடசாலைச் சமூகத்தின் சார்பில் நன்றிகள் பல.

வருடந்தோறும் பித்தளைப் பொருட்களை மினுக்கித் தருவதற்கு திரு. திருமதி விக்கினேஸ்வரன் மல்லிகாதேவி தம்பதிகள் முன் வந்துள்ளனர். அவர்களுக்கு பாடசாலைச் சமூகம் சார்ந்த நன்றிகள் உரித்தாகுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லண்டனைச் சேர்ந்த திரு. திருமதி ஆறுமுகதாசன் றுக்குமணி தம்பதிகள் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு உபகரணத் தொகுதியை அன்பளிப்பு செய்துள்ளனர். அவர்களுக்கும் எமது நன்றிகள் பல.

எமது பாடசாலை மாணவர்கள் 50 பேருக்கு திரு. திருமதி உதயசங்கர் யோகவாணி (லண்டன்) அவர்கள் சீருடைகளை வழங்கி உள்ளனர். அவர்களுக்கும் எமது நன்றிகள்.

பார்வைக் குறைபாடுள்ள மாணவர்களுக்கு மூக்குக்கண்ணாடிகளை இலவசமாக சென்ற வருடமும் இவ்வருடமும் வழங்கிய சுன்னாகம் வாழ்வகத்தினருக்கும் எமது பாடசாலைச் சமூகம் சார்ந்த நன்றிகள்.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு நிதியில் கௌரவ. தர்மலிங்கம் சித்தார்த்தன் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அவர்கள் அலுவலகக் கதிரை, அலுமாரி, முன்பள்ளிக்கான கதிரைகள் என்பவற்றை வழங்கியமைக்காக எமது நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு நிதியில் கௌரவ.மாவை சேனாதிராசா யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அவர்கள் ரூபா 100,000/= ஒதுக்கியமைக்காக எமது நன்றிகள் பல.

## பாராட்டுக்குரியவர்கள்

எமது பாடசாலையில் 2013.02.15 முதல் 2017.09.25 வரை ஆசிரியராகக் கடமையாற்றி SLEAS பரீட்சையில் சித்திபெற்று யாழ் வலய ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளராகப் பதவியுயர்வு பெற்றுச் சென்றுள்ள திரு.பத்மநாதன் சசிகுமார் எமது பாடசாலை வளர்ச்சியில் பெரிதும் பங்கேற்றவர். அவர் மேன்மேலும் வளர்ச்சி பெற எல்லாம் வல்ல ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அடுத்து எமது பாடசாலையில் 2014.01.01 முதல் 2017.11.30 வரை ஆசிரியராகக் கடமையாற்றிய திருமதி தவனேஸ்வரி சிவகுமார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது கணவருடன் சேர்ந்து வாழ்வதற்காக வெளிநாடு சென்றுள்ளார். அவர்களுக்கும் எமது நல்வாழ்த்துக்கள்.

அடுத்து எம்முடன் 2015.05.13 முதல் 2018.03.14 வரை ஆசிரியராகக் கடமையாற்றி வேறு பாடசாலைக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றிருக்கும் திருமதி பாரதி மகேந்திரன் அவர்களது வாழ்வு மென் மேலும் உயர்ந்து வளர வாழ்த்துகின்றேன். அத்துடன் பாடசாலைக்கு பல தேவைகளை இவர்களது குடும்ப உறுப்பினர்கள் பூர்த்தி செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

## பாடசாலைத் தேவைகள்

- ❋ மின்னிணைப்பு – தெற்குப் பக்க வகுப்பறைகள்
- ❋ கணனிகள் – மாணவர் கற்றலுக்கு
- ❋ மின்மணி
- ❋ நூலக நூல்கள், தளபாடங்கள்
- ❋ உள்ளக ஒலிபெருக்கி வசதி
- ❋ மடிக்கணனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2017 இல் உள்ள
# ஆசிரிய ஆளணியினர்

**1. திரு.தம்பிஜயா வாமதேவன்**

கல்விமாணி,
பாடசாலை முகாமைத்துவ டிப்ளோமா
விசேடபயிற்சி ஆ.க. SLPS 3

**2. திரு.இராசரத்தினம் ஜெயதாஸ்**

கல்விமாணி,
கற்பித்தல் தேசிய டிப்ளோமா SLTS 2 II

**3. திருமதி சுமித்திரா சிறீஸ்கந்தராஜா**

விசேட பயிற்சி ஆ.க SLTS 2 II

**4. திருமதி தாரணி சுரேஸ்**

கலைமாணி,
பட்டப்பின் கல்வி டிப்ளோமா SLTS 1
விசேட பயிற்சி ஆ.க

**5. திருமதி அனிற்றா ராஜி அன்ரன்**

விசேட பயிற்சி ஆ.க SLTS 2 II

**6. திருமதி மைதிலி சிவநாதன்**

விசேட பயிற்சி ஆ.க SLTS 2 II

**7. திருமதி உமாராணி பேரானந்தம்**

இசைக்கலைமாணி
பட்டப்பின் கல்வி டிப்ளோமா SLTS 1

**8. திருமதி வக்சலா நிதாகரன்**

கல்விமாணி
விசேட பய்ற்சி ஆ.க SLTS 2 II

**9. திருமதி சத்தியபாமா சதீசன்**

கலைமாணி (சிறப்பு)
பட்டப்பின் கல்வி டிப்ளோமா SLTS 2 I

**10. திருமதி சிவனேஸ்வரி பரமசிவம்**

கலைமாணி SLTS 2 I



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அதிபர், ஆசிரியர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள்....



பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினர்கள்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்குமேல் புள்ளி பெற்ற மாணவர்கள்..



சி.மதியரசன் - 176



த.கெனத் - 174



தி.சுடர்மயன்- 172



வி.லவிசா- 155



70, 100, வெட்டுப்புள்ளிக்கு மேல் புள்ளி பெற்ற மாணவர்களும், அதிபர், ஆசிரியர்களும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றிகள்

மாணவர்களனி கல்வி முன்னேற்றத்திற்கு உந்து சக்தியாக இருந்து செயற்பட்ட அனைத்து நல்லுள்ளங்களுக்கும் எமது பாராட்டுக் களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இன்றைய விழாவிற்கு பிரதம விருந்தினராக வருகை தந்திருக்கும் பெருமதிப்புக்குரிய ந.காண்டீபன் அவர்களுக்கும், சிறப்பு விருந்தினராகக் கலந்து எம்மை மகிழ்வித்துக் கொண்டிருக்கும் எஸ்.சி.சி.இளங்கோவன் அவர்களுக்கும், ப.சசிக்குமார் அவர்களுக்கும் முதற்கண் நன்றியைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன். அத்துடன் ஆசியுரை வழங்கியிருக்கும் வணக்கத்திற்குரிய சிவஸ்ரீ ந.குகனேசக்குருகக்ள் அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

இவ்விழாவிற்கு வருகை தந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் அயற் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள் உரித்தாகுக.

எமது பலதரப்பட்ட கற்றல் – கற்பித்தல் தேவைகளையும் நிறைவு செய்ய எப்போதும் முன்னிற்கும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினருக்கும், பழைய மாணவர்களுக்கும் எமது நன்றிகள்.

எமது பாடசாலையின் கற்றல் – கற்பித்தல் தேவைகளை உணர்ந்து பல வழிகளிலும் உதவிவரும் செல்வநாயகம் நினைவு அறக் கட்டளையினருக்கு எமது மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எமது பணிகளைப் பகிர்ந்து பொறுப்புணர்வுடன் பங்களிப்புச் செய்யும் அன்பான ஆசிரியர் குழாத்தினருக்கும் எமது நன்றிகள்.

பாடசாலையின் வளர்ச்சிக்குப் பாடுபடும் அன்பான பெற்றோர் களுக்கும், நலன்விரும்பிகளுக்கும், மாணவச் செல்வங்களுக்கும் எமது மனம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2017 இல் பரிசு பெறும் மாணவர்கள்

## தரம் - 01

சி.நிவிஜன் – முதன்மை நிலை 1, தமிழ், கணிதம், சுற்றாடல்
சு.திபானா – முதன்மை நிலை 2
பு.கபிசன் – முதன்மை நிலை 3, தமிழ், சுற்றாடல்
ஐ.அனுஶ்ரீ – சமயம்
செ.கௌதமன் – சமயம்
ஆ.ரனுஸ்கா – தமிழ்
ஜெ.சதுர்சியன் – தமிழ்
ம.தணிஸ்கா – தமிழ், சுற்றாடல்
சி.தேனுகா – கணிதம்
ந.சிந்துஜா – கணிதம்
தோ.ஜானுசா – கிறிஸ்தவம்
ச.ரிஷாந் – கிறிஸ்தவம்
க.டானியல் – கிறிஸ்தவம்

## தரம் - 02

சி.ரக்சனா – முதன்மை நிலை 1, சமயம், தமிழ், சுற்றாடல்
சி.டினோஜா – முதன்மை நிலை 2, சமயம், தமிழ், சுற்றாடல்
தி.சுதாங்கன் – முதன்மை நிலை 3, சமயம், கணிதம்
ஏ.அஸ்வின் – தமிழ்
இ.கனுசன் – கணிதம்
சி.பிரதிக்ஷா – கணிதம்
செ.தேனுஜா – சுற்றாடல்
யோ.குயின்ரினா – கிறிஸ்தவம்
ஜெ.பெரணிகா – கிறிஸ்தவம்

## தரம் - 03

உ.நிலானி – முதன்மை நிலை 1, சமயம், தமிழ், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம்
சி.எழிலரசன் – முதன்மை நிலை 2, தமிழ், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ.லுவன்ஜன் – முதன்மை நிலை 3, தமிழ், சுற்றாடல்
த.டனுசன் – சமயம்
உ.ரிஷானி – கணிதம்
மு.மதீசன் – ஆங்கிலம்
கி.துவாரகன் – கிறிஸ்தவம்
சு.கேதுசா – சமயம், ஆங்கிலம்
லோ.டக்சனா – கிறிஸ்தவம்

## தரம் - 04

க.வர்ணவி – முதன்மை நிலை 1, தமிழ், ஆங்கிலம்
ஆ.நிதர்சனா – முதன்மை நிலை 2, சமயம், கணிதம், சுற்றாடல்
ச.சதுர்சிகன் – முதன்மை நிலை 3, சமயம், சுற்றாடல்
நா.தனுசியன் – சமயம், தமிழ்
வை.கோகுலன் – தமிழ், கணிதம்
பி.சுஜந் – தமிழ்
சி.கவிநாஸ் – கணிதம்
தெ.லபிசன் – சுற்றாடல்
கோ.ஹர்சிகா – ஆங்கிலம்
சு.திலக்ஷி – ஆங்கிலம்
த.தரண்ஜா – கிறிஸ்தவம்
த.ஜெருசியா – கிறிஸ்தவம்
க.சிபிக்சன் – கிறிஸ்தவம்

## தரம் - 05

சி.மதியரசன் – முதன்மை நிலை 1, தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், ஆங்கிலம்
த.கெனத் – முதன்மை நிலை 2, தமிழ், சுற்றாடல், ஆங்கிலம்
தி.சுடர்மயன் – முதன்மை நிலை 3, தமிழ், சுற்றாடல், சமயம்
சி.மதுபாஜினி – கணிதம்
கு.கம்பீர் – கணிதம்
வி.லபிசா – கணிதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| வை.பத்மரேணுகா | – | சமயம் |
| ம.ஜிதுசனா | – | ஆங்கிலம் |
| ச.நிதுசன் | – | கிறிஸ்தவம் |
| து.வினுஜன் | – | கிறிஸ்தவம் |

## 2017 தமிழ்மொழித் தினப் போட்டி

| | தரம் | பா.ம | கு.ம | கோ.ம | வ.ம |
|---|---|---|---|---|---|
| **வாசிப்பு** | | | | | |
| கு.கம்பீர் | 5 | 1 | | | |
| தி.சுடர்மயன் | 5 | 2 | | | |
| த.கெனத் | 5 | 3 | | | |
| **கதை ஆக்கத்திறன்** | | | | | |
| த.கெனத் | 5 | 1 | | | |
| ச.நிதுசன் | 5 | 2 | | | |
| சி.மதியரசன் | 5 | 3 | | | |
| **பேச்சு** | | | | | |
| தி.சுடர்மயன் | 5 | 1 | | | |
| வி.லபிசா | 5 | 2 | | | |
| சி.மதுபாயினி | 5 | 3 | | | |
| **இசையும் அசைவும்** | | | | | |
| க.பபிசா | 5 | 1 | | | |
| ஜெ.ஆரபி | 5 | 2 | | | |
| வி.குயிலினி | 5 | 3 | | | |

## ஆங்கில தினப் போட்டி – 2017

### Recitation

| | | |
|---|---|---|
| M.Matheesan | 3 | 1 |
| U.Harish | 3 | 2 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | தரம் | பா.ம | கு.ம | கோ.ம | வ.ம |
|---|---|---|---|---|---|
| **Copy Writing** | | | | | |
| K.Mathusika | 3 | 1 | | | |
| S.Pavincika | 3 | 2 | | | |
| **Recitation** | | | | | |
| K.Danushan | 4 | 1 | | | |
| G.Harsika | 4 | 2 | | | |
| **Copy Writing** | | | | | |
| G.Harsika | 4 | 1 | | | |
| S.Thilakshi | 4 | 2 | | | |
| **Group Song** | 2 | 1 | 2 | | |

## ஆரம்பக்கல்வி போட்டிகள்

| | தரம் | பா.ம | கு.ம | கோ.ம | வ.ம |
|---|---|---|---|---|---|
| **சித்திரம்** | | | | | |
| உ.ஹரிணி | 1 | 1 | 1 | | |
| ஜ.அனுஶ்ரீ | 1 | 2 | | | |
| நி.நிவிஜன் | 1 | 3 | | | |
| த.மதுசிகா | 2 | 1 | 3 | | |
| ச.கஜீன்சன் | 2 | 2 | | | |
| சி.பிரதிக்ஷா | 2 | 3 | | | |
| இ.கனுசன் | 2 | 3 | | | |
| வி.விஸ்மிகா | 3 | 1 | | | |
| உ.கரீஸ் | 3 | 2 | | | |
| ம.வைஷ்ணவி | 3 | 3 | | | |
| த.கவியழகன் | 4 | 1 | | | |
| கு.நிதர்சனா | 4 | 2 | 2 | | |
| வை.கோகுலன் | 4 | 3 | | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | தரம் | பா.ம | கு.ம | கோ.ம | வ.ம |
|---|---|---|---|---|---|
| சி.மதுபாஜினி | 5 | 1 | | | |
| ச.சங்கவி | 5 | 2 | 3 | | |
| கு.கம்பீர் | 5 | 3 | | | |

**திருக்குறள் மனனம்**

| | | |
|---|---|---|
| ஐ.அனுஶ்ரீ | 1 | 1 |
| சி.நிவிஜன் | 1 | 2 |
| ற.விம்ஸி | 1 | 3 |
| சி.ரக்சனா | 2 | 1 |
| சி.டினோஜா | 2 | 2 |
| ர.ரிஷானி | 2 | 3 |
| உ.கரிஸ் | 3 | 1 |
| கி.துவாரகன் | 3 | 2 |
| த.டனுஷாந் | 3 | 3 |
| கோ.கர்சிகா | 4 | 1 |
| கி.டனுசன் | 4 | 2 |
| க.வர்ணவி | 4 | 3 |

**சிங்கள வினாடி வினா**

| | | | |
|---|---|---|---|
| தரம் 2 | 2 | 1 | 3 |
| தரம் 3 | 3 | 1 | 2 |
| தரம் 4 | 4 | 1 | 3 |
| தரம் 5 | 5 | 1 | 1 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விரைவு கணிதம் (100 சதுரப்பெட்டி)**

| | தரம் | பா.ம | கு.ம | கோ.ம | வ.ம |
|---|---|---|---|---|---|
| சி.ரக்சனா | 2 | 1 | | | |
| ச.கோபிராஜ் | 2 | 2 | | | |
| சி.டினோஜா | 2 | 3 | | | |
| சி.பிரதிக்ஷா | 2 | 4 | | | |
| தி.சுதாங்கன் | 2 | 5 | | | |
| சி.எழிலரசன் | 3 | 1 | | | |
| கி.துவாரகன் | 3 | 2 | 3 | | |
| மு.மதீசன் | 3 | 3 | 5 | | |
| சி.பவின்சிகா | 3 | 4 | 2 | | |
| த.டனுசாந் | 3 | 5 | | | |
| வை.கோகுலன் | 4 | 1 | 2 | | |
| சி.கவிநாஸ் | 4 | 2 | 4 | | |
| கி.டனுசன் | 4 | 3 | | | |
| ம.சர்வினா | 4 | 4 | | | |
| ஆ.நிதர்சனா | 4 | 5 | | | |
| சி.மதியரசன் | 5 | 1 | 1 | | |
| ச.கஜித் | 5 | 2 | 3 | | |
| சு.ராஜ்குமார் | 5 | 3 | 5 | | |
| கி.மதுபாஜினி | 5 | 4 | | | |
| து.பவின்சன் | 5 | 5 | | | |

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்

1. சிறிஸ்கந்தராசா மதியரசன் 176 புள்ளிகள்
2. தவநாதன் கெனத் 174 புள்ளிகள்
3. திருநாவுக்கரசு சுடர்மயன் 172 புள்ளிகள்
4. லவிசா விஸ்வலிங்கம் 155 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள்

| | | |
|---|---|---|
| 1. | சி.மதுபாஜினி | 154 புள்ளிகள் |
| 2. | வை.பத்மரேணுகா | 147 புள்ளிகள் |
| 3. | து.பவின்சன் | 144 புள்ளிகள் |
| 4. | கு.கம்பீர் | 142 புள்ளிகள் |
| 5. | ச.கஜித் | 141 புள்ளிகள் |
| 6. | ம.கலைவாணன் | 140 புள்ளிகள் |
| 7. | க.பிரதீபன் | 140 புள்ளிகள் |
| 8. | சு.ராஜ்குமார் | 136 புள்ளிகள் |
| 9. | ய.லயன்சிகா | 133 புள்ளிகள் |
| 10. | க.பபிசா | 133 புள்ளிகள் |
| 11. | சி.மதூஸ் | 132 புள்ளிகள் |
| 12. | ச.நிதுசன் | 131 புள்ளிகள் |
| 13. | அ.டிசானி | 125 புள்ளிகள் |
| 14. | வி.லிசானா | 123 புள்ளிகள் |
| 15. | து.வினுஜன் | 120 புள்ளிகள் |
| 16. | ச.தமிழ்ச்செல்வன் | 115 புள்ளிகள் |
| 17. | சி.சானுசா | 114 புள்ளிகள் |
| 18. | தா.தசாங்கன் | 112 புள்ளிகள் |
| 19. | ஜெ.வஜிதா | 112 புள்ளிகள் |
| 20. | ச.சங்கவி | 104 புள்ளிகள் |
| 21. | ஸ்ரீ.சர்மியா | 100 புள்ளிகள் |

## 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள்

| | | |
|---|---|---|
| 01. | வை.பத்மரேகா | 98 புள்ளிகள் |
| 02. | அ.பிறின்சிகா | 95 புள்ளிகள் |
| 03. | ம.ஜிதுசனா | 95 புள்ளிகள் |
| 04. | சி.சியாம்சன் | 94 புள்ளிகள் |
| 05. | அ.அக்சயா | 93 புள்ளிகள் |
| 06. | ஜெ.ஆரபி | 93 புள்ளிகள் |
| 07. | செ.இம்சிகா | 89 புள்ளிகள் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08. அ.அஸ்மிரா 88 புள்ளிகள்
09. வி.குயிலினி 85 புள்ளிகள்
10. றொ.சுலக்ஷனா 84 புள்ளிகள்
11. த.பவிச்சுடர் 80 புள்ளிகள்
12. சு.டெஸ்வினி 74 புள்ளிகள்
13. இ.பவாஜினி 73 புள்ளிகள்
14. சி.மகிஷா 71 புள்ளிகள்

## 2018 இல் தரம் 1 இல் கல்வி கற்கும் மாணவர்கள்

க.யுதுசானன்
க.கவுசிக்
சி.சிந்துஜன்
பா.விஷ்னுஜன்
வி.சித்தார்த்
ஜெ.துவாரகா
ம.பங்ஷயா
சு.அனித்தா
சி.பிரியங்கா
றே.பிறித்திகா
ச.பவிதரன்
ஜெ.பிரசன்னா
சி.சியாம்ஷிகன்
அ.நிக்சன்
ரா.சானுஜன்
ஜெ.மதுஸ்ரா
பா.சஞ்சனா
ஜெ.ப்ரித்திகா
ம.டாரணி
மோ.யன்சிகா
ரா.தர்சன்
ச.டனுசன்
வி.லதூசன்
ஜெ.சோபிசன்
ர.டிலக்ஷன்
ந.அனுஸ்கா
சி.சிவானா
சி.சர்மி
S.ஜெயசர்மினி
தி.ஜன்சியன்
க.வனிஸ்ரியன்
ச.சாயிராம்
வி.தீபக்
ரா.சுதர்சன்
த.சகீஸ்
சு.ஜெசிபா
நி.கம்சிகா
ச.சந்தியா
வி.டவிசாளினி
உ.சபிசன்
ர.றொஹான்
ச.ஜஸ்வின்தீஸ்
ஜெ.கவின்
சு.வினிஸ்ரன்
சு.பிறித்திகா
மோ.யதுஷா
க.தரணிகா
ர.லேசந்தியா
க.டிலக்சன்
சி.ஹிபிஷாயன்
நி.கதிரவன்
ர.துவாரகன்
றொ.சுஜான்
கோ.லிபின்ஷா
சு.சதுஸ்ரிகா
உ.டோனிஷா
சி.சாம்பவி
த.தஸ்மியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடிக் கீதம்

**இராகம்: மோகனம்** **தாளம் : சதுஸ்ர ஏகம்**

ஏற்றிடுவோம் கொடி ஏற்றிடுவோம்
எழில்மிகு கோலினில் ஏற்றிடுவோம்
(ஏற்றிடுவோம்)

ஏற்றிடுவோம் கொடி எழில்மிகு கோலினில்
போற்றிடும் சூரியன் யாழிசை மேவிட
ஏடது கொண்டிடும் எண்ணுவதுயர்வென
வானுயர் பசுமையும் மயில் நீல எழிலுடன்
(ஏற்றிடுவோம்)

எந்தையும் அன்னையும் இயைபுற வாழ்த்திட
தந்தைசெல்வா தொடக்கநிலைப் பள்ளியை
வந்தனை செய்து நாம் வாயுற வாழ்த்தியே
வையகம் போற்றிட ஏற்றிடுவோம் நிதம்
(ஏற்றிடுவோம்)

தந்தை செல்வா தாங்கிய சிந்தனை
முந்தையாம் தெல்லிநகர் விளை பூமியில்
எந்தையாம் அமிர்தலிங்கமாம் ஆர்வலர்
வந்துதித்தெழுந்த நல்வளர் நிலைப்பள்ளியில்
(ஏற்றிடுவோம்)

மாவைக் கந்தனும் காசிவிநாயகனும்
பூவையாம் புவனேஸ்வரி துணை மேவிட
தாகம் தீர்த்திடும் கல்வியும் கலைகளும்
பாலர் பயின்றிடப் பொலிந்திடும் பள்ளியில்
(ஏற்றிடுவோம்)

**ஆக்கம்: திருமதி ப.கணேசதுரை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக் கீதம்

சீர் பெற்று ஓங்கிடவே சிந்தை மகிழ்ந்தே
பாலர் நாம் வாழ்த்தி நிற்போம் – தலை தாழ்த்தியே

தமிழும் சமயமும் சாஸ்திரம் பலவும்
அமிழ்தினும் இனிய நற்பாங்கினில் அமைந்து
உண்மையோடன்பு உயர்கதி காட்ட
பயிலுறுமாணவர் மேன்மையிற் கனிந்து
(சீர் பெற்று)

ஆக்கமும் ஊக்கமும் அடிநிலையாக
நோக்குறு நெறிகள் நற்பயநல்க
மலர் விழிச் சிறுவர்கள் மதிநலம் பெறுக
நிலவுமெம் தந்தைசெல்வா பள்ளியனுதினமும்
(சீர் பெற்று)

சாயி பிறிண்டேர்ஸ் – 077 2209474

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org